பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 10 2023 **SUNDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அனைவரும் பயணிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. காந்தி ஜெயந்தியை ஒட்டி, நாடுமுழுவதும் 6 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. கருத்து சுதந்திரம் என்பது வன்முறையை தூண்டும் வகையில் இருக்கக்கூடாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. மாலத்தீவின் புதிய அதிபராக திரு. **Mohamed Muizzu** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் மகளிர் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவுக்கு மேலும் 3 பதக்ககங்கள் உறுதியாகியுள்ளன.

**>>>>><<<<<**

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அனைவரும் பயணிக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் அஹமதாபாதில் ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பிரதமரின் விஷ்வகர்மா திட்டம், கைவினைஞர்கள் மற்றும் கிராமப்புற குடிசைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, அவர்களுக்கான அங்கீகாரத்தை உறுதி செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ், ஜி20 உச்சிமாநாட்டை புதுதில்லியில் சிறப்பாக நடத்திய பெருமை பிரதமர் திரு. நரேந்திர மோடியையே சாரும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது, சந்திரயான் 3-ன் வெற்றி, புதிய நாடாளுமன்ற கட்டிடம் உள்ளிட்டவை பிரதமரின் சாதனைகள் என்று திரு. அமித் ஷா கூறினார்.

>>>>><<<<<

காந்தி ஜெயந்தி நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, தேசப்பிதா மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தும் வகையில், இன்று நாடுதழுவிய மாபெரும் தூய்மை இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, தூய்மையே சேவை இயக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்ததுடன், இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் தூய்மை இயக்கத்தில் மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்.

இதனிடையே, புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி, நாடுமுழுவதும் 6 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்தார்.

தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம், நாடுமுழுவதும் 4 ஆயிரத்து 800-க்கும் அதிகமான நகர்ப்புறங்கள் 100 சதவீதம் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகரங்களாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையும் இந்த தூய்மைப் பணியில் பங்கேற்கவுள்ளதாக அவர் கூறினார்.

மக்கள் அதிகமாக கூடும் ரயில் நிலையங்கள், சுற்றுலா மற்றும் வழிபாட்டு தலங்களில் தூய்மைப் பணிகளில் ஈடுபடுவதை மக்கள் தங்கள் வாழ்வில் ஒரு அங்கமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

கருத்து சுதந்திரம் என்பது வன்முறையை தூண்டும் வகையில் இருக்கக்கூடாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காலிஸ்தான் தீவிரவாத அமைப்பிற்கு கனடா ஆதரவு அளிப்பது வன்முறை மற்றும் பயங்கரவாத செயல்களுக்கு துணை போவது போல் அமையும் என்று கூறினார்.

பயங்கரவாத செயல்களுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்திருப்பது, இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

சூரியனை ஆய்வு செய்வதற்காக விண்ணில் செலுத்தப்பட்டுள்ள ஆதித்யா எல்.1 விண்கலம் புவிவட்ட சுற்றுப்பாதையை கடந்து, **Lagrange** புள்ளியை அடையும் வகையில் அதன் பயணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளார்.

பூமியிலிருந்து ஒன்றரை லட்சம் கிலோமீட்டர் தொலைவில் உள்ள **Lagrange** புள்ளியில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட்டு, சூரியனை ஆய்வு செய்யும்.

**>>>>><<<<<**

மாலத்தீவின் புதிய அதிபராக திரு. **Mohamed Muizzu** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது முறையாக நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணியைச் சேர்ந்த திரு. **Muizzu** 54 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றுள்ளார்.

தற்போதைய அதிபரான திரு. **Ibrahim Solih** 46 சதவீத வாக்குகளை பெற்றார்.

இம்மாதம் 17ஆம் தேதி புதிய அதிபராக திரு. **Mohamed Muizzu** பொறுப்பேற்கவுள்ளார்.

**>>>>><<<<<**

தேசிய ரத்த தான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இவ்வாண்டு ரத்ததான தினத்தின் கருப்பொருள், ரத்ததானம் மட்டுமின்றி பிளாஸ்மா தானமும் செய்வோம், வாழ்வை பகிர்ந்து கொள்வோம் என்பதாகும்.

இந்நாளையொட்டி, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 18 வயது முதல் 65 வயதுவரையுள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒருமுறை ரத்ததானம் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

உரிய கால இடைவெளியில் ரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி, உடல்நலம் காக்கப்படுகிறது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நடப்பாண்டில் தமிழ்நாடு, தன்னார்வ ரத்ததானத்தில் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர் திரு. நிதின் குப்தாவின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. நிதின் குப்தாவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடையும் நிலையில், மத்திய அரசு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

அவர் பதவியில் நீடிக்கும் ஒன்பது மாத காலமும் ஒப்பந்த அடிப்படையிலானது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தலைநகர் தில்லியில் நடப்பாண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில் காற்றின் தரக்குறியீட்டின் சராசரி விகதம் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளில் காற்றின் தரம் 167ஆக பதிவாகியுள்ளது.

>>>>><<<<<

வடக்கு காஷ்மீரில் அமைந்துள்ள குப்வாரா மாவட்டத்தில் உள்ள எல்லைப் பகுதியில் ஊடுருவ முயன்ற இரண்டு பாகிஸ்தான் தீவிரவாதிகளை, பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

அவர்களிடமிருந்து இரண்டு ஏ.கே. ரக துப்பாக்கிகள், அதற்கான மெகஜின்களும், குண்டுகளும், கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

பாகிஸ்தான் நாட்டு ரூபாய் நோட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

>>>>><<<<<

பிரதமரின் விஷ்வகர்மா திட்டம், சிறுதொழில்களில் ஈடுபட்டுள்ள மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் திட்டமாக அமைந்துள்ளது என்று பிஜேபி தேசிய மகளிர் அணித் தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இத்திட்டத்தில் பதிவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி அவர் பேசினார்.

கர்நாடக மாநிலம், உடுப்பியில் மத்திய அரசின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்கநகை செய்பவர்களுக்கான பயிற்சி மையத்தை போல, கோவையிலும் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மணிப்பூரில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறப்பு உதவி திட்டத்தின் கீழ், நிதியுதவியை முதலமைச்சர் திரு. பைரன் சிங் நேற்று வழங்கினார்.

மாநில அரசின் அடையாள அட்டை வைத்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக ஒருமுறை உதவியாக தலா 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், வன்முறையால் பாதிக்கப்பட்டு, மாநிலத்தில் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இந்த தொகை உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

வீடுகளை இழந்தவர்களுக்கு புதிதாக வீடு கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. பைரன் சிங் கூறினார்.

>>>>><<<<<

இந்த ஆண்டுக்கான தென்மேற்கு பருவமழை முடிவடைந்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதம் தொடங்கி, செப்டம்பர் மாதம் வரையிலான இந்த பருவமழை காலத்தில் இதுவரை 94 புள்ளி நான்கு சதவீதம் மழை பெய்துள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இந்தப் பருவமழை மூலம், நாட்டின் 73 சதவீத இடங்கள் மழை பொழிவை பெற்றுள்ளதாக அந்த மையத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு அக்டோபர் மாதத்தில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பநிலை, இயல்புநிலையை விட அதிகரிக்கும் என வானிலை மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

தெலங்கானா மாநிலத்தின் மேம்பாட்டிற்காக, 21 ஆயிரத்து 566 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

இன்று பிற்பகல் ஹைதராபாத் வழியாக, மகபூப் நகரில் செல்லும் அவர், 505 கோடி ரூபாய் மதிப்பிலான **Jagler - Krishna** இடையேயான புதிய ரயில்பாதையை நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

இதனையொட்டி அங்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஆயிரம் இடங்களில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்த் தடுப்புக்காக சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று நடைபெறும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, நோய்த் தடுப்பு போன்ற பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மூலம் மாநிலத்தில் தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் 2 ஆயிரத்து 972 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நோய்த்தடுப்பு பணிகளில் 23 ஆயிரத்து 717 தற்காலிகப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஆடவர் பேட்மிண்டன் குழுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Preeti, Lovlina Borgohain, Nikhat Zareen** ஆகியோர் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.இதன் மூலம், இந்தியாவுக்கு மேலும் 3 பதக்கங்கள் உறுதியாகியுள்ளது.

இப்போட்டியில் 10 தங்கம், 14 வெள்ளி, 14 வெண்கல பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது.

**>>>>><<<<<**

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்தியா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

காத்மண்டுவில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா 3-0 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

இப்போட்டியில் இந்தியா தொடர்ந்து, இரண்டாவது முறையாக கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**>>>>><<<<<**